**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 157 /2019 PW .7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சபரிதாசன் | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026

---

**( 1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 6 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**11.03.2026 முதல் விசாரணை:**

1.நான் தற்போது சென்னை பெருநகர திருவாண்மையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2015 ம் தேதி சிங்கம்புணரி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவலை பெற்று சிங்கம்புணரி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த மட்டிகரைப்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் மகன் வயிரவன் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் 16.00 மணிக்கு வந்துநிலைய குற்ற எண் 109/2015 யில் இதச பிரிவுகள் 147,148, 294(பி), 323, 324,506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ–7, முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையை தினமே 16.45 மணிக்கு சம்பவ இடமான சிவபுரிபட்டி சிவன் கோவில் முன்புசம்பவ இடத்தை சாட்சிகள் சேவுகன், தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரிவரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றேன். **( அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ–9 , மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவ இடத்தில் எதிரிகள் தாக்குதலுக்கு பயன்படுத்திய உருட்டு

கட்டையை கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு காயம்பட்ட நபர்களையும், வழக்கின் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு காயம்பட்ட நபர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கிய அரசு மருத்துவர் இராமநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் முன் பிணையில் சென்ற படியால் எதிரிகளை கைது செய்யவில்லை.